<u>**சார்பு நீதிமன்றம், ஓமலூர், சேலம் மாவட்டம்**</u>

**முன்னிலை: திருமதி. த. மாலதி, பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, ஓமலூர்.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் நாள் திங்கட்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 16ம் நாள்)

<u>**இந்து திருமண அசல் மனு எண்: 113/2025**</u>
<u>**CNR No.TNSA19-000551-2025**</u>

சத்யா ...மனுதாரர்

/எதிராக/

பழனிவேல் ...எதிர்மனுதாரர்

இம்மனுவானது, கடந்த 10.03.2026-ம் தேதியன்று என் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் **திரு.G.இளையராஜா** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் **திருமதி.வி.கவிதா** அவர்கள் முன்னிலையாகியும், பின்னர் சாட்சியங்களையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>**உத்தரவு**</u>

இம்மனுவானது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 14.02.2024ம் தேதியன்று கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், மாதம்பதி-கமலாபுரத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீகுமரக்குன்று முருகர் ஆலயத்தில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, விவாகரத்து பரிகாரம் வழங்கக்கோரி இந்து திருமணச் சட்டம் 1955 பிரிவு 13(1) (ia)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்.-**

மனுதாரரும் எதிர்மனுதாரரும் கணவன், மனைவி ஆவார்கள். மனுதாரருக்கும்,

எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 14.02.2024ம் தேதியன்று இருவீட்டு பெற்றோர் சம்மதத்துடன் சாதி, குல, வழக்கப்படி கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், மாதம்பதி–கமலாபுரத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீகுமரக்குன்று முருகர் ஆலயத்தில் சாதி குலவழக்கப்படி திருமணம் நடைபெற்றிருக்கிறது. திருமணத்திற்கு பின்னிட்டு மனுதாரரும் எதிர்மனுதாரரும் கணவன் மனைவியாக எதிர்மனுதாரரின் வீட்டில் சுமார் ஒரு வருடத்திற்கு மேலாக குடும்பம் நடத்திவந்திருக்கிறார்கள். திருமணத்தின் பயனாக மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் குழந்தை ஏதும் பிறக்கவில்லை.

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் மேற்படி திருமணமானது இரண்டாவது திருமணம் ஆகும். மனுதாரருக்கு ஏற்கனவே சேலம் மாவட்டம், சேலம், பழைய சூரமங்கலத்தை சேர்ந்த பழனிசாமி மகன் வீரமணி என்பவருடன் திருமணம் நடைபெற்று, திருமணத்தின் பயனாக குழந்தைகள் ஏதுமின்றி இருந்த நிலையில் இம்மனுதாரருக்கும், மேற்படி வீரமணி என்பவருக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டு, மனுதாரர் இந்நீதிமன்றத்தில் HMOP.No.79/2023 என்ற எண்ணில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கில் கடந்த 18.12.2023ஆம் தேதியன்று விவாகரத்து பரிகாரம் வழங்கி தீர்ப்பாகியுள்ளது. அதேபோல் எதிர்மனுதாரருக்கும் முதல் திருமணம் நடைபெற்று திருமணத்தின் பயனாக ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. இந்நிலையில் எதிர்மனுதாரரின் முதல் மனைவி இறந்துவிட்டதால், இம்மனுதாரரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டுள்ளார். மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணமானது ஒருமித்த கருத்துடன் தான் ஏற்பட்டது.

மனுதாரரும், எதிர்மனுதாரரும் திருமணமான சில மாதங்களுக்கு பின்னர் மிகுந்த கருத்துவேறுபாடு கொண்டு மன ஒற்றுமை இல்லாமல் வாழ்ந்து வந்துள்ளனர். மனுதாரரையும், எதிர்மனுதாரரையும் அவரது பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் பல சமயங்களில் சமரசம் செய்ய முயற்சித்தும் சமரசம் ஏற்படவில்லை. திருமண பந்தத்தை தொடர விருப்பம் இல்லாமல் மனுதாரர், திருமண உறவை முறித்துக்கொள்ளலாம் என்ற தவிர்க்க முடியாத சூழ்நிலைக்கு இப்போது வந்துள்ளார்.

மனுதாரரும், எதிர்மனுதாரரும் கடந்த 25.04.2025ம் தேத முதல் தனித்தனியாக வாழ்ந்து வருகின்றனர். மனுதாரரும், அவரது பெற்றோரும் மற்றும் ஊர் பஞ்சாயத்தார்கள் அனைவரும் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்று மனுதாரருடன் எதிர்மனுதாரரை சேர்ந்து வாழ கூறியபோது எதிர்மனுதாரர், மனுதாரருடன் சேர்ந்து வாழ துளியும் விருப்பம் இல்லையென்றும், வேண்டுமென்றால், தன்னிடமிருந்து விவாகரத்து பெற்றுக்கொள்ளுங்கள் என்றும் கூறியுள்ளார். அதன் பின்னர் இதுநாள் வரை மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டில் மிகவும் சிரமத்துடன் தனியாக வாழ்ந்து வந்திருக்கிறார். எதிர்மனுதாரர் தன் மனைவியான மனுதாரருக்கு செய்ய வேண்டிய எந்தவிதமான கடமையையும் செய்யாமல் தன் மனம் போன போக்கில் வாழ்ந்து வந்திருக்கிறார். மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்வதற்கான எவ்வித சாதகமான சூழ்நிலையும் இல்லை. இனிமேல் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்தால் வாழ்க்கை இனிமையாக இருக்காது என்ற சூழ்நிலையின் காரணமாகவும் மற்றும் மனுதாரர் தனது எதிர்கால நலன் கருதியும் எதிர்மனுதாரரோடு சேர்ந்து வாழ முடியாது என்ற முடிவுக்கு மனுதாரர் வந்துவிட்டிருக்கிறார். ஆகவே இனியும் மனுதாரர், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு சாத்தியம் இல்லை என்பதனால் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் ஏற்பட்ட திருமணத்தை ரத்து செய்யக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் உரையின் சுருக்க</u>ம்.–

மேற்படி மனுவில் எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்ளும் ஒரு சில சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளும் பொய்யானதும், உண்மைக்கு புறம்பானதாகும். சட்டப்படிக்கும் நியாயபடிக்கும் செல்லாததாகும். இந்த மனுவானது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் அனைத்தும் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர் மனுவில் குறிப்பிட்டு கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானவை, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் எதிர்மனுதாரர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை முற்றிலுமாக மறுத்துரைக்கிறார். மனுதாரரால் தாக்கல்

செய்யப்பட்டுள்ள மனுவினை செலவுதொகையின்றி அனுமதிப்பதில் எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**4. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவெனில்:–**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையேயான திருமண பந்தம் ரத்து செய்யத்தக்கதா? என்பதேயாகும்.

**5.** மனுதாரர் தரப்பில் மனுதாரர் திருமதி.சத்யா ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அருள்மிகு ஸ்ரீகுமரக்குன்று முருகர் ஆலயத்தில் வழங்கிய திருமண ரசீது ம.சா.ஆ.1 ஆகவும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் ம.சா.ஆ.2 ஆகவும், மனுதாரரின் ஆதார் அட்டை ம.சா.ஆ.3 ஆகவும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் பழனிசாமி எ.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, எதிர்மனுதாரர் ஆதார் அட்டை எ.ம.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6. பிரச்சனைக்கு தீர்வு**

மனுதாரர் தரப்பு வாதுரையில், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணமான சில மாதங்களுக்கு பின்னிட்டு மிகுந்த கருத்துவேறுபாடு ஏற்பட்டதன் காரணமாக மன ஒற்றுமை இல்லாமல் வாழ்ந்து வந்தார்கள் என்றும், மனுதாரரையும், எதிர்மனுதாரரையும் அவரது பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் பல சமயங்களில் சமரசம் செய்ய முயற்சித்தார்கள் என்றும், ஆனால் அது பயனளிக்கவில்லை என்றும், எனவே இனியும் மனுதாரரால் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ இயலாது என்றும் எனவே, திருமணத்தை ரத்து செய்யக் கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரர் தரப்பில் வாதம் எடுத்துரைக்கப்பட்டது.

அதற்கு மாறாக, எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரரும், எதிர்மனுதாரரும் கருத்து வேறுபாட்டினால் பிரிந்து வாழ்ந்து வருவதால் இனிமேற்கொண்டு சேர்ந்து வாழ இயலாத சூழ்நிலை உருவாகி உள்ளதால், மனுதாரர் கோரியுள்ளவாறு விவாகரத்து வழங்க

எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும் வாதம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

7. மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளை தான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளார். ம.சா.1 குறுக்கு விசாரணையில், "எதிர்மனுதாரர் மீது குறியுள்ள குற்றச்சாட்டுக்களை தவிர்த்துவிட்டு விவாகரத்து பெற எதிர்மனுதாரர் சம்மதிக்கிறார் என்றால் ஒப்புக்கொள்கிறேன் என்றும், திருமணத்தின் பயனமாக குழந்தைகள் இல்லை என்றும், பின்னும் தொடர்ச்சியாக எதிர்மனுதாரரிடமிருந்து ஜீவனாம்சம் எதுவும் கோரபோவதில்லை என்றும் சாட்சியம் அளித்திருக்கிறார் என்பது தெரியவருகிறது. எதிர்மனுதாரர் அவரது குறுக்கு விசாரணையில் மனுதாரர் மீது கூறியுள்ள குற்றச்சாட்டுக்களை தவிர்த்துவிட்டு விவாகரத்து பெற மனுதாரர் சம்மதிக்கிறார் என்றால் ஒப்புக்கொள்கிறேன் என்று சாட்சியம் அளித்திருக்கிறார் என்பது தெரியவருகிறது.

8. இருதரப்பும் கேட்கப்பட்டு இம்மனுவின் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் முன்னிலைப்படுத்தியுள்ள வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவண சாட்சியங்களை பரிசீலிக்கையில், மனுதாரர் எதிர்மனுதாரரின் சட்டப்படியான மனைவி என்பதிலும் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 14.02.2024ம் தேதியன்று திருமணம் நடைபெற்றது என்பதும், திருமணத்திற்கு பின்னிட்டு, மனுதாரரும், எதிர்மனுதாரரும் கணவன் மனைவியாக எதிர்மனுதாரரின் வீட்டில் சில மாதங்கள் குடும்பம் நடத்தி வந்துள்ளார்கள் என்பதும் பின்னிட்டு மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் இருவரும் கடந்த 25.04.2025ம் தேதி முதல் பிரிந்து தனித்தனியாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதும், இந்த திருமணத்தின் பயனாக மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் குழந்தைகள் எதுவும் இல்லை என்பது தெரியவருகிறது.

மேலும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் எதிர்காலத்தில் சேர்ந்து வாழக்கூடிய வாய்ப்பில்லை என்றும், இருதரப்பினரும் விவாகரத்துக் பெற்றுக் கொள்வதற்கு சம்மதம்

தெரிவித்துள்ளதாலும், இருதரப்பிலும் இனிமேற்கொண்டு சேர்ந்து வாழ வாய்ப்பில்லை என்பதால் இருவரும் பிரிந்து விடுவதாக ஒப்புக்கொண்டு மனுதாரரும் , எதிர்மனுதாரரும் சாட்சியம் அளித்திருப்பதாலும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் எதிர்கால வாழ்க்கை நலனை கருத்தில் கொண்டும் மனுதாரர், எதிர்மனுதாரர் கோரியவாறு விவாகரத்து வழங்கி உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 14.02.2024ந் தேதியன்று கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், மாதம்பதி–கமலாபுரத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீகுமரக்குன்று முருகர் ஆலயத்தில் நடைபெற்ற திருமணத்தை ரத்து விவாகரத்து வழங்க இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்.</u>–**

மசா.1 – சத்யா (மனுதாரர்)

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.</u>–**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ம.சா.ஆ.1 | 14.02.2024 | அருள்மிகு ஸ்ரீகுமரக்குன்று முருகர் ஆலயத்தில் வழங்கிய திருமண ரசீது | அசல் |
| 2. | ம.சா.ஆ.2 | – | மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் | அசல் |
| 3. | ம.சா.ஆ.3 | 10.04.2013 | மனுதாரரின் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்.</u>–**

எ.மசா.1 – பழனிவேல் (எதிர்மனுதாரர்)

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.</u>–**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | எ.ம.சா.ஆ.1 | – | எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.